மாண்புமிகு பேரவைத் தலைவர்: பல்லாயிரக்கணக்கான என்பது சரியல்ல. பலர் இறந்துவிட்டார்கள் என்பதுதான் சரியாக இருக்கும். (குறுக்கீடு) அவர் சொன்னது பல்லாயிரக்கணக்கான (குறுக்கீடு)

திரு. த.க. இராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கூறியது, பல்லாயிரக்கணக்கான டன் எடையுள்ள மணலால் மூடப்பட்டு அந்தப் பேருந்தில் சென்றவர்கள் உயிர் இழந்துள்ளனர் என்பதுதான். அந்தப் பேருந்து விபத்தில் உயிர் இழந்தவர்களில் எனது தொகுதியைச் சேர்ந்தவர்களும் இருந்தார்கள். ஆகையால்...

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அது இருக்கலாம்.

(ஆ) திருத்துறைப்பூண்டி ஒன்றியத்தில் குரும்பல் உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டிடம் கட்டவேண்டிய அவசியம் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அடுத்த கவன ஈர்ப்பு. திரு. ஜி. பழனிசாமி அவர்கள், அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். திரு. ஜி. பழனிசாமி.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகப்பட்டினம் காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குரும்பல் உயர்நிலைப் பள்ளி முழுவதும் கீற்றுக் கொட்டகையாக இருப்பதால், புதிய கட்டிடம் உடனே கட்ட வேண்டிய அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கை ஒன்று அவைமுன் வைக்கப்பட்டுள்ளது.

விவர அறிக்கை

நாகை-காயிதே மில்லத் மாவட்டம், திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள குரும்பலில் ஊராட்சி ஒன்றிய உயர்நிலைப் பள்ளி இல்லை. இங்கு ஊராட்சி ஒன்றிய பள்ளிதான் உள்ளது. இப்பள்ளிக்கு

மூன்று கட்டிடங்கள் உள்ளன. இந்த மூன்றில் ஒரு கட்டிடம் உறுதி செய்யப்பட்ட திண்காரை (R.C.C. roofing). மற்றொன்று ஆஸ்பெஸ்டாஸ் கூரை. மற்றொன்று கீற்றுக் கொட்டகையாகும். இம்மூன்று கட்டிடங்களும் நல்ல நிலையில் உள்ளன. கீற்றுக் கொட்டகை கட்டிடத்திற்கு 22-10-1992ல் புதிய கீற்று போடப்பட்டது. கடந்த புயலில் சேதம் ஏற்படவில்லை. பள்ளியில் மாணவர்கள் பயின்று வருகிறார்கள். அவர்களுக்குப் போதிய இடவசதி உள்ளது. மாணவர்களின் படிப்பு தடைபடவில்லை. இருப்பினும் 1994-95-ஆம் ஆண்டில் பள்ளி தொடங்குமுன் புதிய கீற்றுக் கொட்டகை போடப்பட்டு நல்ல நிலையில் பராமரிக்கப்படும்.

முற்பகல் 11-20

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையினை நான் படித்துப் பார்த்தேன். இது ஊராட்சி ஒன்றியத்துக்குச் சொந்தமான கட்டிடம் என்றும், இது உயர்நிலைப் பள்ளி அல்ல என்றும் விவர அறிக்கையில் கூறப்பட்டிருக்கிறது. அந்தப் பள்ளிக்கூடம், உயர்நிலைப் பள்ளி என்பது, மணலி உயர்நிலைப் பள்ளியாக இருந்ததை, இந்த குரும்பல் என்ற ஊரில் உயர்நிலைப் பள்ளியாக வைத்து, ரயில்வே கேட்டுக்கு அப்பால் இது அமைக்கப்பட்டிருக்கிறது. அங்கே அதேபோன்று ஒரு பள்ளியே இல்லை என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுரையிலே குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அந்த உயர்நிலைப் பள்ளி மணலிக்கு உயர்நிலைப் பள்ளியாக இருந்தது. அது குரும்பல் என்ற இடத்தில் இருப்பதனால், குரும்பல் என்ற அந்த இடத்தை நான் குறிப்பிட்டேன். அதிகாரிகள் தங்களுக்குத் தடுமாற்றம் ஏற்படும் என்பதால், அவர்கள் அந்த இடத்தைக் கண்டுபிடிப்பதற்காகத்தான், அந்த இடத்தைப்பற்றிய சரியான அட்ரஸைக் கொடுத்து இருந்தேன். அதேபோன்று ஒரு பள்ளியே இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தன்னுடைய குறிப்பிலே குறிப்பிட்டு இருக்கிறார்கள். இருந்தாலும், அந்தப் பள்ளிக்கு-சமீபத்திலேகூட ஒரு முஸ்லீம் பெருமகனார் இலவசமாக ஒரு லட்ச ரூபாய்க்கு ஒரு கட்டிடத்தைக் கட்டித் தந்து இருக்கிறார். அந்தக் கட்டிடத் திறப்பு விழாவுக்கும் நான் சென்று இருந்தேன். அதேபோன்று மற்ற இடங்களில் எல்லாம் கீற்றுக் கொட்டகை இருக்கிறது; தளங்கள் கிடையாது. அதனால்தான் இதனை அமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வந்தேன். ஆக, இப்படிப்பட்ட பதிலுரையில் அது தவறான பதிலாக இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்களுடைய கவனத்துக்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல, பதிலிலே எந்தத் தவறும் இல்லை. கேட்கப்பட்டு இருக்கின்ற கேள்வியிலே தவறு இருக்கிறது. திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலே இருக்கின்ற குரும்பல் உயர்நிலைப் பள்ளி என்று தெளிவாகக் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. திருத்துறைப்பூண்டி ஊராட்சி ஒன்றியத்திலே 2 பகுதிகள் இருக்கின்றன. குரும்பல் என்ற ஒரு பகுதி; மணலி என்ற இன்னொரு பகுதி. உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற, தற்போது சொல்கின்ற உயர்நிலைப் பள்ளி மணலியிலே இருக்கிறது. ஆகவே, அவர்களுடைய கேள்வி, மணலியிலே என்று கேட்டு இருந்தால், உண்மையாகவே மணலி உயர்நிலைப் பள்ளிக் கட்டிடம் எந்த நிலையில் இருக்கிறது, என்ன பிரச்சினை என்று சொல்லி இருக்க முடியும். ஆனால், குரும்பல் உயர்நிலைப் பள்ளி என்று இருக்கின்ற காரணத்தினாலேதான் பிரச்சினை. குரும்பலிலே உயர்நிலைப் பள்ளி இல்லை; ஒன்றியப் பள்ளி மட்டும்தான் இருக்கிறது. ஆகவே, அந்த ஒன்றியப் பள்ளியிலே எந்தவிதமான பாதிப்பும் ஏற்படவில்லை என்று தெளிவான பதில் கொடுத்து இருக்கிறோம். ஆனால், மணலியில் கூட உறுப்பினர் அவர்கள் சொல்லியபடி இந்த பதிலை நான் பார்த்த பிறகு, அது சம்பந்தப்பட்ட அதிகாரியை நானே தொலைபேசியில் தொடர்புகொண்டு அதுபற்றிக் கேட்கின்றபொழுது, மணலியிலே ஒரு உயர்நிலைப் பள்ளி இருக்கிறது; அது வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு இருக்கிறது என்று சொல்லி இருக்கிறார்கள். அதற்கு உண்டான நடவடிக்கைகள், அந்தக் கட்டிடங்களுக்கு ஏற்பட்டு இருக்கின்ற பாதிப்புகள், அங்கே இருக்கின்ற தளங்கள் பாதிக்கப்பட்டு இருப்பதை எல்லாம் சரி செய்வதற்காக அரசு உத்தரவிட்டு இருக்கிறது. பள்ளி நடந்து கொண்டு இருக்கிறபோது அந்த நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாது. பாதிப்புகள் நிறைய இருக்கின்ற காரணத்தினால், நிறைய வேலைகள் செய்ய வேண்டி இருக்கின்றன. ஆகவே, இந்த விடுமுறை நாட்களில் அவை எல்லாம் சரி செய்யப்பட்டு, அடுத்த ஆண்டு, கல்வி ஆண்டுத் தொடக்கத்திலே அந்தப் பள்ளி நல்ல முறையிலே இயங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜி. பழனிசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த உயர்நிலைப் பள்ளி என்பது, மணலியிலே ஏற்கெனவே வாடகைக் கட்டிடத்தில் இயங்கிக்கொண்டு இருந்தது. சமீபத்திலே, அரசாங்கத்தினுடைய புறம்போக்கு இடத்திலே இன்றைக்கு குரும்பல் என்ற இடத்திலேதான் அந்தப் பள்ளி சுமார் 3 ஆண்டுக் காலமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அந்த இடத்திலேதான் புதிய

கட்டிடம் கட்டப்பட்டு, அந்தப் பள்ளி நடைபெற்றுக் கொண்டு இருக்கிறது. அதனால்தான் மணலி உயர்நிலைப்பள்ளி என்கிற பழைய பெயரிலே செயல்பட்டுக் கொண்டு இருக்கிறது. குரும்பல் என்ற இடத்தை இடம் மாற்றம் செய்ய வேண்டும். ஆகவே, நான் சரியான இடத்தைத்தான் குறிப்பிட்டு இருக்கிறேன் என்று சொல்லி, அந்த உயர்நிலைப் பள்ளியையும், அந்த இடிந்த கட்டிடங்களையும் சரி செய்வதற்கு அரசு முயற்சி எடுக்குமா, இந்த ஆண்டுக்குள்ளே நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. டி.எம். செல்வகணபதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டதுபோல, இது ஏதோ எல்லைத் தகராறு என்று கருதுகிறேன். இரண்டு கிராமங்கள் பக்கத்திலே இருக்கின்ற காரணத்தினால், எல்லையிலே இருக்கின்ற காரணத்தினால், இந்தப் பிரச்சினை எழுந்து இருக்கலாம். மீண்டும் அதைத் தீவிரமாகப் பரிசீலனை செய்து, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்த விடுமுறையிலே அந்தப் பள்ளிக்குண்டான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் நிவர்த்தி செய்து நடத்தி வைக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

5. அறிக்கை அளித்தல்

அரசு உறுதிமொழிக் குழு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கையை அளித்தல். திரு.எஸ். டேனியல்ராஜ், அரசு உறுதிமொழிக் குழுவின் தலைவர்.

திரு. எஸ். டேனியல்ராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு சட்டமன்ற பேரவை, 1993-94 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் பதின்மூன்றாவது அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கின்றேன்.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS